வேலூர் மாவட்டம்

இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் மற்றும் மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பொதுத்தேர்வு மார்ச் 2019

தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர் / துறை அலுவலர்கள் / அறைக் கண்காணிப்பாளர்கள் / பறக்கும் படை உறுப்பினர்கள் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கான

முக்கிய சுற்றறிக்கை

1. தேர்வு மையத்தில் பணிபுரிவதற்கான ஆணை பெறப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் மட்டுமே தேர்வு மையத்தில் பணிபுரிய அனுமதிக்க வேண்டும்.

2. தேர்வு மையங்களில் தேர்வுகள் நடைபெறும் அன்றோ அல்லது தேர்வுகள் நடைபெறும் நேரங்களிலோ தேர்வு மைய பள்ளியில் பணிபுரிந்து வரும் எந்தவொரு பணியாளர்கள் மற்றும் வெளி நபர்கள் தேர்வு மையத்தில் இருத்தல் கூடாது. உயர் அதிகாரிகள் தேர்வு மையங்களை பார்வையிடும் போது கண்டறியப்பட்டால் சார்ந்த தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர் மற்றும் துறை அலுவலர்கள் மீது கடுமையான நடவடிக்கை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

3. தேர்வு மையத்திற்கு தேவையான எழுதுபொருட்கள் மற்றும் இருப்பிட வசதிகளை தேர்வுகள் தொடங்கும் நாளுக்கு முந்தைய நாள் சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. தேர்வு மையங்களில் நியமனம் செய்யப்பட்ட நிரந்தர படை / பறக்கும் படை ஆசிரியர்கள் தேர்வு மையத்திலிருந்து விடைத்தாட்கள் எடுத்து செல்லும் வரை தேர்வு மையங்களில் இருத்தல் வேண்டும.

5. தேர்வு அறைகள் ஒதுக்கீடு செய்யும் போது ஒரே கட்டித்தில் இருப்பதை உறுதி செய்துக்கொள்ள வேண்டும். வெவ்வேறு கட்டிடங்களில் அறைகள் ஒதுக்கீடு செய்வதை தவிர்க்கப்பட வேண்டும்.

6. தேர்வு மையங்களில் தேர்வு அறைகளில் சலசலப்புகள் இல்லாமல் மாணவர்களுக்கு எவ்வித இடர்பாடுகள் இல்லாமல் தேர்வுகள் நடைபெறும் வகையில் முதன்மைக் கண்காணிப்பாளர்கள்/ துறை அலுவலர்கள் மற்றும் அறைக் கண்காணிப்பாளர்கள் செயல்படவேண்டும்.

7. தேர்வு அறைகளில் அறைக் கண்காணிப்பாளர்கள் அமருவதற்கு இருக்கை வசதியினை தவிர்க்கப்பட வேண்டும்.

8. தேர்வு மையங்களில் நியமனம் செய்யப்பட்ட சொல்வதை எழுதுவர்கள் தேர்வர்கள் கூறும் விவரங்களை மட்டுமே எழுதவேண்டும் எனவும், தாங்களே விவரங்களை எழுதக்கூடாது. அரசாணை நிலை 28, பள்ளிக்கல்வி (வி1) துறை நாள் 10–02–2010 மற்றும் அரசாணை (நிலை) எண்54, பள்ளிக் கல்வி (ஜிஇ1) துறை நாள் 29–02–2016 ல் சொல்வதை எழுத மட்டுமே கூறப்பட்டுள்ளது. அரசாணைகளுக்கு முரணாக செயல்படும் ஆசிரியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

9. தேர்வு மையத்தில் தேர்வுகள் நடைபெறும் நேரத்தில் முதன்மைக் கண்காணிப்பாளரை தவிர வேறு எந்த ஆசிரியரோ அல்லது அலுவலக பணியாளர்களோ அலைபேசியினை பயன்படுத்த கூடாது.

10. தேர்வு மையங்களில் பணிபுரியும் அனைத்து ஆசிரியர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் அடையாள அட்டையினை பயன்படுத்தப்பட வேண்டும். போதிய அளவு இல்லை என்றால் உடன் சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலகத்தினை தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

11. தேர்வு மைய கட்டுப்பாட்டு அறையில் கணினியினை பயன்படுத்துவதை முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும்.

12. தேர்வு நேரத்தில் தேர்வு மைய கட்டுப்பாட்டு அறையில் மாணவர்கள் பயிலும் புத்தகங்கள் இருத்தல் கூடாது.

13. தேர்வு மைய கட்டுப்பாட்டு அறையில் மாணவர்களுக்கு வழங்கி மீத முள்ள வினாத்தாட்களை உரிய நேரத்தில் பீரோவில் வைத்து அரக்கு சீலிடப்பட்டு முதன்மைக் கண்காணிப்பாளர் கையொப்பமிட்டு நாள் மற்றும் நேரம் குறிப்பிடப்படவேண்டும்.

14. மேற்குறிப்பிட்டுள்ள அறிவுரைகளை கட்டாயம் பின்பற்றப்பட வேண்டும். உயர் அலுவலர்களின் ஆய்வின் போது மேற்குறிப்பிட்டுள்ள அறிவுரைகளை பின்பற்றப்படவில்லை என கண்டயறிப்பட்டால் சார்ந்த தேர்வு மையத்தில் பணிபுரியும் முதன்மைக் கண்காணிப்பாளர் / துறை அலுவலர்கள் / பறக்கும் படைஉறுப்பினர் / அறைக் கண்காணிப்பாளர் மற்றும் அலுவலக பணியாளர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொண்டு ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

14.3.24

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூா்

பெறுநர்

தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர் / துறை அலுவலர்கள் / அறைக் கண்காணிப்பாளர்கள் / பறக்கும் படை உறுப்பினர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள்

நகல்

மாவட்டக் கல்வி அலுவலர்
திருப்பத்தூர் / வேலூர் / அரக்கோணம் / இராணிப்பேட்டை / வாணியம்பாடி தொடர் நடவடிக்கைக்கு அனுப்பலாகிறது.

குறிப்பு

இச்சுற்றறிக்கையின் மீது தாங்கள் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் உடன் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டும் என அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.